# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.த.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097177

1. District மாவட்டம் : Pudukkottai PS: காவல்நிலையம் V&Ac Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 3/19 Date: நாள் 25.2.19

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 and Crpc Sections பிரிவுகள்: 102 Crpc and 7 of Prevention of Corruption (Amendment) Act 2018
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 28.12.18 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.45h Time to : நேரம் வரை 19.15h
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.12.18 Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Prohibition of Enforcement wing, Alangudi pudukkottai district 24km far
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல்-தந்தவர் பெயர் Tmt. Ponmalai (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Harihara pandian
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Head Seraisthar (Excise) (g) Address : முகவரி Collectorate Pudukkottai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. Neelakandan Inspector of police Prohibition Enforcement wing, Alangudi, ~~unit~~, Pudukkottai district
2. Tr. Suresh Gr.I PC 113 Prohibition Enforcement wing Alangudi, Pudukkottai district

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Got order from DVAC

GCP 240-34(Type 2) 90 000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

கடந்த 28-12-2018ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு பார்டியினரும் சேர்ந்து மாலை 05.45 மணி முதல் 07.15 மணி வரை புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி, மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் திருமதி.பொன்மலர், க/பெ ஹரிகரபாண்டியன், வயது 50/2018, அலுவலக மேலாளர் (கலால்) மாவட்ட ஆட்சியரகம், புதுக்கோட்டை மற்றும் ஆய்வுக்குழு அலுவலர், புதுக்கோட்டை, பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை, அய்யா, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.நீலகண்டன் அவர்கள் சட்ட விரோதமாக பார் நடத்துபவர்களிடம் பணம் வசூல் செய்வதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரில் 28.12.2018ஆம் தேதி நானும், திரு.நாகநாதன், துணை வட்டாட்சியர், "Y" பிரிவு, மாவட்ட

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறைமீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

25/2/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25.2.19 at 10.30hrs

Name: பெயர் Y. Charles Nepolianroy
Rank: நிலை Inspector of Police ...No. எண் ...
VQAC, Pudukkottai

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை மற்றும் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு புதுக்கோட்டை மற்றும் காவல் குழுவினர்களுடன் இணைந்து திடீர் சோதனை மேற்கொண்டோம். சோதனையின் போது மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அலுவலகத்தில் தரைத்தளத்தில் பெண் தலைமைக்காலர் 1299 திருமதி.ராஜகுமாரி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மரியதாஸ், தலைமைக்காவலர் 545 திரு.முருகன் ஆகியோர் அலுவலகத்தில் அலுவலில் இருந்தனர். அலுவலக மேல் தளத்தில் உள்ள அறையில் காவல் ஆய்வாளர் திரு.க.நீலக்கண்டன் இருந்தார். அந்த அறையின் வராண்டாவில் காவல் ஆய்வாளரின் வாகன ஓட்டுநர் முதல்நிலைக்காவலர் 113 திரு.சுரேஷ் நின்று கொண்டிருந்தார். ஆஜரில் இருந்தவர்களிடம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் தன்னையும் மேற்படி அரசு சாட்சிகளையும் மதுவிலக்கு காவல் ஆய்வாளர் திரு.நீலகண்டனிடம் அறிமுகம் செய்து கொண்டு திடீர் ஆய்வு மேற்கொள்ள வந்த விபரத்தை கூறி திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திடீர் ஆய்வின் போது காவல் ஆய்வாளர் அறையில் இருந்த DIESAL, என்று பித்தாளையில் எழுதப்பட்ட சாம்பல் நிற டூர் பேக்கை சோதனை செய்ய, அதில் ரூ.2000 நோட்டுகள் ஒரு கத்தையாகவும், ரூ.500 நோட்டுகள் ஒரு கத்தையாகவும் இருந்தன. மேலும் இரண்டு நூறு ரூபாய் கட்டுகள் ரப்பர் பேண்ட் போட்டு இருந்தன. மேலும் நூறு ரூபாய் நோட்டுகளும், இருநூறு ரூபாய் நோட்டுகளும், ஐம்பது ரூபாய் நோட்களும் கத்தையாக இருந்தன. அவற்றை அரசு சாட்சிகள் மூலம் எண்ணி பார்க்க அதில் ரூ.1,11,300/- இருந்தது. (2000X24=48,000, 500X76=38,000, 100X240=24000, 200X3 =600, 50X14=700) மேலும் காவல் ஆய்வாளர் திரு.நீலக்கண்டனிடம் வேறு ஏதேனும் பணம் வைத்திருக்கிறீர்களா என்று கேட்டதற்கு, அவர் தனது பேண்டின் பின்புற பாக்கெட்டில் இருந்த மணி பர்ஸை எடுத்து கொடுக்க, அதனை சோதனை செய்ய அதில் கத்தையாக ஐநூறு ரூபாய் நோட்டுகள், இருநூறு ரூபாய் நோட்டுகள், நூறு ரூபாய் நோட்டுகள், ஐம்பது ரூபாய் நோட்டுகள், இருபது மற்றும் பத்து ரூபாய் நோட்டுகள் இருந்தன. அவற்றை அரசு சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.5,760/- இருந்தன. (500X1=500, 200X11=2200, 100X20=2000, 50X16=800, 20X7=140, 10X12=120). அதன் பிறகு வராண்டாவில் நின்று கொண்டிருந்த காவல் ஆய்வாளரின் ஓட்டுநர் திரு.சுரேஷ் என்பவரை விசாரிக்க அவர் அணிந்திருந்த கருப்பு கலர் பேண்டின் இடது புற பாக்கெட்டில் இருந்த ஒரு பண கத்தையை எடுத்து ஆஜர் செய்தார். அதனை அரசு சாட்சிகள் மூலம் எண்ணிப்பார்க்க அதில் ரூ.8,590/- இருந்தன. (2000X3=6,000, 500X3=1,500, 200X1=200, 100X5 =500, 50X5=250, 20X7=140) மேற்படி தொகை பற்றி மதுவிலக்கு காவல் ஆய்வாளர் திரு.நீலகண்டனிடமும், காவல்

ஆய்வாளரின் ஓட்டுநர் திரு.சுரேஷ் என்பவரிடமும் விளக்கம் கேட்க, அவர்கள் எவ்வளவு பணம் வைத்திருந்தார்கள் என்பதை சொல்லாமல் முன்னுக்குப்பின் முரணாக கூறி சரியான விளக்கம் கூறாததால் மேற்படி தொகை மொத்தம் ரூ.1,25,650/- திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் காவல் ஆய்வாளர் திரு.நீலகண்டன் என்பவரது அறையில் உள்ள செல்பில் இருந்த மாமூல் வாங்கி கொடுத்த கணக்கு வழக்குகள் மற்றும் வரவு செலவுகள் எழுதப்பட்ட 33 தாள்கள் மற்றும் கணக்குகள் எழுதப்பட்ட ஒரு காக்கி கலர் கவரும் கைப்பற்றப்பட்டது. மேலும் ஓட்டுநர் திரு.சுரேஷ் என்பவரை விசாரணை செய்ய இன்று (28.12.2018) ஆம் தேதி ஆலங்குடி அக்னி ஆற்று பாலம் அருகில் பார் வைத்திருக்கும் திரு.சங்கர், பாத்தாம் பட்டியில் பார் வைத்திருக்கும் திரு.வெற்றி, ஆண்டிகுளத்தில் பார் வைத்திருக்கும் பார் உரிமையாளர் மற்றும் சில பார் உரிமையாளர்களும் காவல் ஆய்வாளர் திரு.நீலகண்டனை சந்தித்து மாமூல் கொடுத்துவிட்டு சென்றதாகவும், யார் யார் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்ற விபரம் தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார். அதன் பிறகு ஆஜரில் இருந்த பெண் தலைமைக்காவலர் திருமதி.ராஜகுமாரி என்பவரை அரசு சாட்சி அலுவலக மேலாளர் திருமதி.பொன்மலர் விசாரித்த போது ரூ.1,100/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது பற்றி அவரிடம் விளக்கம் கேட்க நான் CCTNSல் பணி புரிவதாகவும், ஒரத்தநாடு தாலுகா சென்னியவிடுதியிலிருந்து தினமும் அலுவலுக்கு வருவதாகவும், பணிமுடித்தது செல்லும் போது வீட்டிற்கு வேண்டிய பொருட்கள் வாங்குவதாற்காக வீட்டிலிருந்த கொண்டு வந்த பணம் என்றும் கூறினார். எனவே அந்த பணம் ரூ.1,100/-ம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் ஆஜரில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மரியதாஸ் என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடம் ரூ.840/- இருப்பதாக கூறி ஆஜர் செய்தார். அதைப்பற்றி விளக்கம் கேட்க, மேற்படி பணம் வீட்டிலிருந்து கொண்டு வந்த பணம் என்றும், மனைவியின் மருத்துவ செலவுக்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அதனால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு, அந்த பணம் ரூ.840/-ம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் ஆஜரில் இருந்த தலைமைக்காவலர் 545 திரு.முருகன் என்பவரை விசாரணை செய்ய அவர் தன்னிடம் ரூ.300/- பணம் இருப்பதாக கூறி ஆஜர் செய்தார். அதை பற்றி அவரிடம் விளக்கம் கேட்க மேற்படி பணம் தனது செலவுக்காக வீட்டிலிருந்த கொண்டு வந்த சொந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் ரூ.300/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

இச்சோதனையில் முடிவில் மேற்கண்ட ஆலங்குடி மதுவிலக்கு காவல் ஆய்வாளர் திரு.நீலகண்டன் மற்றும் அவரது வாகன ஓட்டுநர் முதல்நிலைக்காவலர் 113 திரு.சுரேஷ் ஆகியோர் சட்ட விரோதமாக பார் நடத்துபவர்களிடமிருந்து வசூல் செய்து வைத்திருந்த

பணம் என்று தெரிய வந்ததின் பேரில் மேற்படி பணம் ரூ.1,25,650/-ம் கைப்பற்றப்பட்டது. எனவே மேற்படி நபர்களின் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் (திருமதி.பொன்மலர், அலுவலக மேலளார் (கலால்) மாவட்ட ஆட்சியரகம், புதுக்கோட்டை).

மேற்படி புகாரை பெற்று மேற்படி புகாரின் பேரில் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களுக்கு மேற்படி அலுவலர்கள் மீது வழக்கு பதிவு செய்ய அனுமதி வேண்டி அனுப்பி வைத்த அறிக்கையை தொடர்ந்து மேற்படி அலுவலர்கள் (1) திரு.நீலகண்டன் ஆலங்குடி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் (2) முதல்நிலைக்காவலர் 113 திரு.சுரேஷ் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திலிருந்து 22.02.2019ஆம் தேதி கிடைக்கப்பெற்ற உத்தரவை தொடர்ந்து மேற்படி புகாரின் பேரில் இன்று 25.02.2019ஆம் தேதி காலை 09.00 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.03/2019 பிரிவு 102 கு.வி.மு.ச மற்றும் 7 of Prevention of Corruption (Amendment) Act-2018ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. S/d.Y.சார்லஸ் நெப்போலியன் ராஜ், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை நாள்.25.02.2019.

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் மற்றும் திடீர் ஆய்வு அறிக்கையையும் புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலகர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.